Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொறுப்பு), தருமபுரி</u>
<u>அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>முன்னிலை : திரு.கி.சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ,</u>

<u>ந.க.எண். 720/2021/தமா</u> நாள். .08.2021

ஐயா,

பொருள். மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தருமபுரி மாவட்டம் - பாலக்கோடு வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - செல்லியம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - ச.எண்.345/2A-ல 0.69.94 ஹெக்டேர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் - வழங்குதல் குறித்து.

பார்வை.

1) மனுதாரர் திரு.P.இராஜேந்திரன் என்பவரின் ஆன்லைன் விண்ணப்பம் எண்.202101001012088, நாள். 27.03.2021, 13.07.2021 மற்றும் 04.08.2021.
2) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
3) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
4) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017.
5) நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
6) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் ,வழங்கல் துறை, நாள்.31.01.2020.
7) நகர்ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019.பிஏ2, நாள்.06.11.2019.
8) நகர்ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019.பிஏ2, நாள்.05.02.2020.
9) அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
10) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
11) நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/202/போ, நாள்.24.12.2020.
12) இணை இயக்குநர் வேளாண்மைத் துறை தருமபுரி அவர்கள் கடிதம் ந.க.எண்.இ2/2227/2021, நாள்.19.03.2021.
13) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.05.05.2021 மனுதாரருக்கு முகவரியிட்டது (சாலை மற்றும் பொது உபயோக பரப்புகளை உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பரப்பினை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது தொடர்பாக.)
14) மேற்பார்வை பொறியாளர் தருமபுரி மின் பகிர்மான வட்டம் , தருமபுரி அவர்கள் கடிதம் எண். மேபொ/த/மதொஅ/உபொ/கோ மனு/ எண.374/21.22 நாள்.19.06.2021
15) தலைவர், செல்லியம்பட்டி ஊராட்சி அவர்களின் சான்று நாள்.இல்லை.

16) இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள்.26.07.2021
17) மனுதாரரால் உரிய கட்டணங்கள் செலுத்திய விவரம் பெறப்பட்ட நாள்.04.08.2021.

உத்தரவு:

பார்வை 1.ல் கண்ட மனுதாரரின் கடிதத்தில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், செல்லியம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்.345/2A-ல் 0.69.94 ஹெக்டேர் பரப்பளவு புன்செய் நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி விண்ணப்பம் பெறப்பட்டது. பார்வை 13.ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.05.05.2021.ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 1.ல் கண்ட 13.07.2021 நாளிட்ட மனுதாரரின் கடிதத்தில் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.2571/2021, நாள்.17.06.2021.ல் சாலை மற்றும் பொது உபயோக பரப்புகளை தானமாக உள்ளாட்சிக்கு ஒப்படைத்தும் மற்றும் தானப்பத்திர எண்.2570/2021, நாள்.17.06.2021.ல் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 14.ல் கண்ட மேற்பார்வை பொறியாளர், மின்பகிர்மான வட்டம் தருமபுரி அவர்களின் கடிதத்தில் அசல் ஆவணம் தானமாக பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 15.ல் கண்ட செல்லியம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் சான்றில் சாலை மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட அசல் ஆவணம் ஒப்படைக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/மா.ந.ஊ.அ.(தமா).எண்.34/2021</u> என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ).ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு, ,வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

1. (a) பார்வை 10.ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6.ல் கண்ட TNCDBR.2019 விதி எண்.47 (11).ன் படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதியில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains. Water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. பார்வை 4 மற்றும் 5.ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The Promoter has to advertise, market, book sell or sale or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 3.ல் கண்ட அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017.ன் விதி.3ன்படி ரூ.1000 - பரிசீலனைக் கட்டணம் உள்ளாட்சியில பெற்றும், விதி.9ன் படி மனைப்பிரிவு இடத்திற்கு விற்பனை மதிப்பில் (market value) 3% தொகையினை மனுதாரர்களிடமிருந்து பெற்று கீழ்கண்ட அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

நிலபயன்மாற்றத் தொகையை அரசுக்கு மனுதாரரால் செலுத்திய பின்னரே நிலப்பயன் மாற்றம், தொழில்நுட்ப ஒப்புதலும் அமுலுக்கு வரும் அதன் பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

5. பார்வை 2-ல் கண்ட அரசாணையின் படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.7500 - உரிய அரசு கணக்கு தலைப்பில் நாள்.27.07.2021 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டது மற்றும் கொடிநாள் நிதி ரூ.2000 -க்கான கேட்பு வரைவோலை அசல் பெறப்பட்டுள்ளது. உள்ளாட்சியால் இதர கட்டணங்கள் பெறப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.

பெறுநர்
தலைவர்,
செல்லியம்பட்டி ஊராட்சி,
பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம்,
தருமபுரி மாவட்டம்.

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (3 தொகுப்பு வரைபடங்கள்)

நகல்

1.The Chairman
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.14, CMDA Tower II,
1st Floor Gandhi irwin Bridge road,
Egmore, Chennai – 600 008.
(உத்தரவு கடிதம் மட்டும்)

2.மனுதாரர்
Mr.P.Rajendran
S/o. Ponnusamygounder,
D.No.5/442 Ponnusamy Street,
Collectorate Post, Lakkiyampatti
Dharmapuri Dt – 636 704.
(உத்தரவு கடிதம் மட்டும்)

3. இருப்பு கோப்பு (மனைப்பிரிவு வரைபடம் (ம) நிபந்தனைகள் - 1 தொகுப்பு)

ஊராட்சி மன்றத் தலைவர்,செல்லியம்பட்டி அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.பி.ராஜா

ந.க.எண்.: 01/2021/செ(ஊ)

நாள்:

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் - செல்லியம்பட்டி ஊராட்சி செல்லியம்பட்டி வருவாய் கிராமம் ச..எண். 345/2A ஆகியவற்றில் 1.70 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் - வரப்பெற்றுள்ளது - இதில் 6879.66 ச.மீ பரப்பளவு கொண்ட 1 மனை - இறுதி ஒப்புதல் வழங்குவது - சார்பு.

பார்வை:

1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017
2. நகர் ஊரமைப்பு துறை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம் அவர்களின் நடவடிக்கை ந.க.எண்.720/2021/தமா நாள்: 12.08.2021
3. வழிகாட்டி மதிப்பு இணையதள பதிவு நாள்: 04.08.2021
4. செல்லியம்பட்டி ஊராட்சி தீர்மான எண்.3 நாள்: 05.10.2021

உத்தரவு

பாலக்கோடு ஒன்றியம், செல்லியம்பட்டி ஊராட்சி செல்லியம்பட்டி வருவாய் கிராமம் ச.எண். 345/2A எண்ணில் 1.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு பார்வை 2ல் காணும் நடவடிக்கை ஆணையில் தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் மனை வரைபடத்திற்கு ம.வ./மாநஊஅ(தமா) எண்.38/2021 என எண்ணிட்ட மனை ஒப்புதலும் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கியும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு முறைபடுத்த உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை நிர்ணயம் செய்து தருமபுரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி அவர்களின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் அரசாணையின்படியும், இம்மனை பிரிவில் விற்பனை செய்யப்படாத மனையின் மொத்த பரப்பளவில் 10% பொது இடத்திற்கான நிலம் (பூங்கா) மனை பிரிவு உரிமையாளரால் 1933.45 சதுர மீட்டர் காலியாக விடப்பட்டுள்ளது. மேலும் திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3ன்-படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மொத்தம் 25 மனையில் 23 மனைகளுக்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரன்முறைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்க்கண்ட விவரப்படி செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்.	விவரம்	தொகை செலுத்திய தலைப்பு விவரம்	தொகை
1	நிலப்பயன் மாற்றக்கட்டணம்	0217-Urban Development 60-Other Urban Development scheme 800-Other receipts Reservation (DSR) Area – 45 Open space Eservaton Area -01 urban DPC 0217 60 800AM4512	11900/-
2	கூராய்வு கட்டணம்	The President	1000
3	மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணம்(1.70*1000)	Selliyampatti panchayat Indian bank, pulikarai	1700
4	வுரைபட கட்டணம் (2 x 240)	A/c No: IFSC Code:	480

எனவே, செல்லியம்பட்டி ஊராட்சி செல்லியம்பட்டி கிராமம திரு.பி.ராஜேந்திரன் த/பெ பொன்னுசாமி கவுண்டர், இலக்கியம்பட்டி, தருமபுரி என்பவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி அவர்களின் கொள்கை அளவிலான வரன்முறை ஆணை மற்றும் வரன்முறை எண்.34/2021 உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் முறைப்படி மனுதாரர் செலுத்தி உள்ளதன் அடிப்படையில் வீட்டு மனை 25 மனைகளில் 23 மனைகளுக்கு மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு முறைபடுத்தி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்ககரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு(Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே TNCDBR-2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்படப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. முனையின் ஊடே குறைந்த அழுத்த உயர் அழுத்த மின்கம்பிப் பாதை தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்பாடமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய தலைவர், செல்லியம்பட்டி ஊராட்சி அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலத்தால் தொழில் நுட்ப அனுமதி (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், தலைவர், செல்லியம்பட்டி ஊராட்சி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/ Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையில் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

[signature]

தலைவர்
செல்லியம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர்
பாலக்கோடு செல்லியம்பட்டி ஊராட்சி

பெறுநர்
திரு.பி.ராஜேந்திரன்
த/பெ பொன்னுசாமி கவுண்டர்
5/442 பொன்னுசாமி தெரு
கலெக்ரேட் அஞ்சல்,
இலக்கியம்பட்டி
தருமபுரி -636704

நகல்: நகர்புற ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தப்பப்படுகிறது.
நகல்: சார் பதிவாளர் அலுவலகம், ~~பாலக்கோடு~~ தருமபுரி தகவலுக்காக
நகல்: வட்டார வளாச்சி அலவலர்(கிஊ), பாலக்கோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate